அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 26/95

எனது இல. 11/2/9/245(எச்)11-1
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
1995.08.04

செயலாளர்கள்;
திணைக்களத் தலைவர்கள்;
அரச கூட்டுத்தாபன நியதிச் சட்டச்
சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.

பிறப்பு சான்றிதழுக்குப் பதிலாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிற சான்றிதழ்களை ஏற்றுக் கொள்ளல்.

---

நபர்களின் பெயர்களையும், பிறந்த திகதிகளையும் நிரூபிக்கும் பொருட்டு பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பின்வரும் சான்றிதழ்களில் ஏதாவது ஒரு சான்றிதழை ஏற்றுக் கொள்ள முடியும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) பிறப்பைப் பதிவு செய்த பதிவாளரால் வழங்கப்பட்ட பிறப்பு பதிவேட்டிலிருந்து இலவசமாக வழங்கப்பட்ட பிரதி(பதிதல் ஆ படிவம் 1)

(ஆ) பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரதி பண்ணப்பட்ட குறிப்பு (பதிதல் ஆ படிவம் 65)

~~(இ) உத்தேச வயதுச் சான்றிதழ் (பதிதல் ஆ படிவம் 142)~~

(ஈ) மகவேற்புச் சான்றிதழ் (பதிதல் ஆ படிவம் 143)

(உ) பிறப்புப் பதிவேட்டில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

என்றும் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாறான சான்றிதழ்களின் பேரில் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமிடத்து அதை பதிவாளர் நாயகத்திடம் அனுப்பி பரிசீலனை செய்து கொள்ளல் வேண்டும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.